சின்னமனூர் நகராட்சி
சின்னமனூர்.
நாள்:– 28.02.2018

## சாதாரணக் கூட்டம்

திருவள்ளுவர் ஆண்டு, ஹேவிளம்பி வருடம் மாசி மாதம் 16–ம் நாள் (பிப்ரவரி திங்கள் 28–ம் நாள்:–28.02.2018) புதன் கிழமையன்று பிற்பகல் 05.00 மணியளவில் சின்னமனூர் நகராட்சி தனி அதிகாரி அவர்களின் தலைமையில் நடைபெற்ற கூட்ட நடவடிக்கைகள் விபரம்.

தனி அதிகாரி மற்றும் ஆணையாளர்
சின்னமனூர் நகராட்சி.

**பொருள் எண்.1**

சின்னமனூர் நகராட்சிப் பகுதிகளில் நடைபெற்ற திட்டப்பணிகள் மற்றும் இதர பணிகளை ஆன்லைன் மூலம் ஒப்பந்தப்புள்ளிகளை பதிவேற்றம் செய்ய மற்றும் பதிவிறக்கம் செய்ய தேவையான E-Token –ஐ ஆணையாளர் பெயரில் வாங்கிய வகையில் ஆன செலவினம் ரூ.2200/–ஐ வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:–** **1. மன்றம் அனுமதிக்கலாம்.**
**2. மேற்கண்ட நடவடிக்கையின் அவசர அவசியம் கருதி ஆணையாளர் அவர்களின் முன் அனுமதி பெற்று தொகை வழங்கியதை மன்றம் ஏற்கலாம்.**

**தீர்மான எண், நாள்**
**தீர்மானம்**

*******

**பொருள் எண்.2**

இந்நகராட்சிக்குச் சொந்தமான 2018–2021ம் ஆண்டு குத்தகை இனமான முத்துலாபுரம் சாலையில் உள்ள புளிய மரங்களின் மேற்பலன்கள் மட்டும் அனுபவிக்கும் உரிமத்திற்கு ஒப்படைக்கும் நாள் முதல் மூன்றாண்டு காலத்திற்கு 22.02.2018ம் அன்று நடைபெற்ற பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் முன் வைப்புப் தொகை செலுத்தி ஏலம் கோர ஒருவரும் முன் வரவில்லை.

மேற்கண்ட இனத்திற்கு கீழ்க்காணும் விவரப்படி முன் வைப்புத் தொகை செலுத்தி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மட்டும் வரப்பெற்றுள்ளன மேற்படி ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | ஒப்பந்தப்புள்ளிதாரர் பெயர் மற்றும் முகவரி | ஒப்பந்தப்புள்ளி ஆண்டுக் கேள்வி ரூபாய் |
|---|---|---|
| 1. | S.M.சுகுமாறன், த/பெ.முனியாண்டி, அங்கு விலாஸ் ரைஸ்மில் தெரு, சின்னமனூர் | 28368/– |
| 2. | A.கண்ணன், த/பெ.அய்யாத்தேவர் மெயின் ரோடு, காசுக்கடை சந்து, சின்னமனூர் | 27000/– |

**அலுவலகக் குறிப்பு:–** **மேற்படி ஏல இனத்திற்கு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மட்டும் வரப்பெற்றுள்ளது. இதில் வரிசை எண்.1இன்படி, திரு.**S.M.சுகுமாறன் த/பெ.முனியாண்டி என்பவர் கோரியுள்ள உயர்ந்த பட்ச தொகை ரூ.**28368/–** கடந்த மூன்றாண்டு சராசரியைக் காட்டிலும் ரூ.**4198/– (28368–24170=4198)** கூடுதலாகவும் கடந்த ஆண்டு உரிமத் தொகையைக் காட்டிலும் ரூ.**3010/– (28368–25358=3010)** கூடுதலாகவும் உள்ளதால் மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.**5431/2017**/அ**2**).

**தீர்மான எண், நாள்**
**தீர்மானம்**

*******

**பொருள் எண்.3**

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.12, கீழரதவீதியில் கண்ணாடி கடை முக்கு அருகில் தரைகடை அமைத்து நடத்தி வரும் கடையை காலி செய்ய வேண்டி க.பழனிச்சாமி த/பெ.கதிர்வேல் பிள்ளை என்பவரால் சென்னை உயர்நீதி மன்றம் மதுரை கிளையில் வழக்கு தொடரப்பட்டு நடைபெற்று வரும் வழக்கு எண்.W.P.(MD) 23997/2017ல் இந்நகராட்சி சார்பாக வழக்கு நடத்தும் திரு.எம்.கருப்பசாமி பாண்டியன், அரசு வழக்கறிஞருக்கு வழக்கு கட்டணம் ரூ.7500/– மற்றும் இதரக் கட்டணம் ரூ.2500/– ஆக மொத்தம் ரூ.10000/– வழங்க செலவுத் தொகைக்கு மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:–** **அனுமதிக்கலாம். (ந.க.எண்.6550/2015/அ2).**

**தீர்மான எண், நாள்**
**தீர்மானம்**

*******

**பொருள் எண்.4**

இந்நகராட்சிக்குச் சொந்தமான 2018–2021 ஆம் ஆண்டு குத்தகை இனமான நகராட்சி வாரச்சந்தையில் கட்டணம் வசூலிக்கும் உரிமத்திற்கு ஒப்படைக்கும் நாள் முதல் மூன்றாண்டு காலத்திற்கு 22.02.2018ம் அன்று நடைபெற்ற பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் முன் வைப்புத் தொகை செலுத்தி ஏலம் கோர ஒருவரும் முன் வரவில்லை.

மேற்கண்ட இனத்திற்கு கீழ்காணும் விவரப்படி முன் வைப்புத் தொகை செலுத்தி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மட்டும் வரப்பெற்றுள்ளன. மேற்படி ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | ஒப்பந்தப்புள்ளிதாரர் பெயர் மற்றும் முகவரி | ஒப்பந்தப்புள்ளி ஆண்டுக் கேள்வி ரூபாய் |
|---|---|---|
| 1. | மா.பால்பாண்டி, த/பெ.மாயாண்டி தேவர், பண்ணைப்பட்டி, உசிலம்பட்டி | 7,51,000/– |
| 2. | ம.பாலமுருகன் த/பெ.மணிமுத்து, வ.எண்.17, க.எண்.23F/2D வஉசி 4வது தெரு, சின்னமனூர் | 6,00,000/– |

**அலுவலகக் குறிப்பு:–** **மேற்படி ஏல இனத்திற்கு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மட்டும் வரப்பெற்றுள்ளது. இதில் வரிசை எண்.1இன்படி மா.பால்பாண்டி, த/பெ.மாயாண்டி தேவர் என்பவர் கோரியுள்ள உயர்ந்த பட்ச தொகை ரூ.751000/– கடந்த மூன்றாண்டு சராசரியைக் காட்டிலும் ரூ.67958/– (751000–683042=67958) கூடுதலாகவும் கடந்த ஆண்டு உரிமத் தொகையைக் காட்டிலும் ரூ.34375/– (751000–716625=34375) கூடுதலாகவும் உள்ளதால் மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.5431/2017/அ2)**

**தீர்மான எண், நாள்**
**தீர்மானம்**

*******

**பொருள் எண்.5**

இந்நகராட்சிக்குச் சொந்தமான 2018–2021ம் ஆண்டு குத்தகை இனமான ஆட்டி தொட்டியில் கட்டணம் வசூலிக்கும் உரிமத்திற்கு ஒப்படைக்கும் நாள் முதல் மூன்றாண்டு காலத்திற்கு 22.02.2018 அன்று நடைபெற்ற பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் முன் வைப்புத் தொகை செலுத்தி ஏலம் கோர ஒருவரும் முன் வரவில்லை.

மேற்கண்ட இனத்திற்கு கீழ் காணும் விவரப்படி முன் வைப்புத் தொகை செலுத்தி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மட்டும் வரப்பெற்றுள்ளன. மேற்படி ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | ஒப்பந்தப்புள்ளிதாரர் பெயர் மற்றும் முகவரி | ஒப்பந்தப்புள்ளி ஆண்டுக் கேள்வி ரூபாய் |
|---|---|---|
| 1. | மு.குப்பமுத்து, த/பெ.முத்து இருளாண்டி வ.எண்.26, வெள்ளையன் தெரு, கே.கே.குளம், சின்னமனூர் | 1,40,565/– |
| 2. | ரா.சந்தனபிள்ளை வ.எண்.17, வ.உ.சி 4வது தெரு, சின்னமனூர் | 1,40,000/– |

அலுவலகக் குறிப்பு:– **மேற்படி ஏல இனத்திற்கு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மட்டும் வரப்பெற்றுள்ளது. இதில் வரிசை எண்.1 இன்படி திரு.மு.குப்பமுத்து த/பெ.முத்து இருளாண்டி என்பவர் கோரியுள்ள உயர்ந்த பட்ச தொகை ரூ.140565/– கடந்த மூன்றாண்ண் சராசரியைக் காட்டிலும் ரூ.14465/– (140565–126100=14465) கூடுதலாகவும் கடந்த ஆண்டு உரிமத் தொகையைக் காட்டிலும் ரூ.8265/–(132300–140565=8265) கூடுதலாகவும் உள்ளதால் மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.5431/2017/அ2).**

**தீர்மான எண், நாள்**
**தீர்மானம்**

*******

**பொருள் எண்.6**

இந்நகராட்சிக்குச் சொந்தமான ஆட்டி தொட்டியில் கட்டணம் வசூலிக்கும் உரிமத்தில் 2015–2016 முதல் 2017–2018 மூன்றாண்டு காலத்திற்கு (01.10.2015 முதல்) குத்தகை உரிமம் வழங்கப்பட்டது. மீண்டும் 01.04.2018 முதல் 30.09.2018 வரை தொடர்ந்து நடத்துவதற்கு மு.பார்த்திபன் த/பெ.முனியாண்டி என்பவரால் சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளையில் வழக்கு தொடரப்பட்டு நடைப்பெற்று வரும் வழக்கு எண்.W.P.(MD) 3494/2018ல் இந்நகராட்சி சார்பாக வழக்கு நடத்தும் திரு.எம்.கருப்பசாமி பாண்டியன், அரசு வழக்கறிஞருக்கு வழக்குக் கட்டணம் ரூ.7500/– மற்றும் இதரக் கட்டணம் ரூ.2500/– ஆக மொத்தம் ரூ.10000/– வழங்க செலவுத் தொகைக்கு மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு:– **அனுமதிக்கலாம். (ந.க.எண்.194/2015/அ2)**

**தீர்மான எண், நாள்**
**தீர்மானம்**

*******

**பொருள் எண்.7**

இந்நகராட்சிக்குச் சொந்தமான 2018–2021ம் ஆண்டு குத்தகை இனமான நேருஜி பேருந்து நிலைலத்திற்குள் வந்து செல்லும் பேருந்துகளுக்கு கட்டணம் வசூலிக்கும் உரிமம் ஒப்படைக்கும் நாள் முதல் மூன்றாண்டு காலத்திற்கு 22.02.2018 அன்று நடைபெற்ற பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் முன் வைப்புத் தொகை செலுத்தி ஏலம் கோர ஒருவரும் முன்வரவில்லை.

மேற்கண்ட இனத்திற்கு கீழ்க்காணும் விவரப்படி முன் வைப்புத் தொகை செலுத்தி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மட்டும் வரப்பெற்றுள்ளன. மேற்படி ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | ஒப்பந்தப்புள்ளிதாரர் பெயர் மற்றும் முகவரி | ஒப்பந்தப்புள்ளி ஆண்டுக் கேள்வி ரூபாய் |
|---|---|---|
| 1. | மா.பால்பாண்டி த/பெ.மாயாண்டித் தேவர் பண்ணைப்பட்டி, உசிலம்பட்டி. | 4,28,000/– |
| 2. | சி.சந்தானத்துரை, த/பெ.சின்னாத் தேவர், கே.போத்தம்பட்டி, உசிலம்பட்டி (தாலுகா) மதுரை மாவட்டம். | 4,26,000/– |

**அலுவலகக் குறிப்பு:–** **மேற்படி ஏல இனத்திற்கு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மட்டும் வரப்பெற்றுள்ளது. இதில் வரிசை எண்.1 இன்படி மா.பால்பாண்டி த/பெ.மாயாண்டித் தேவர் என்பவர் கோரியுள்ள உயர்ந்த பட்ச தொகை ரூ.428000/– கடந்த மூன்றாண்டு சராசரியைக் காட்டிலும் ரூ.38141/– (428000–389859=38141) கூடுதலாகவும் கடந்த ஆண்டு உரிமத் தொகையைக் காட்டிலும் ரூ.18972/– (428000–409028=18972) கூடுதலாகவும் உள்ளதால் மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.5431/2017/அ2).**

**தீர்மான எண், நாள்**
**தீர்மானம்**

*******

**பொருள் எண்.8**

இந்நகராட்சிக்குச் சொந்தமான 2018–2021ம் ஆண்டு குத்தகை இனமான பெரியகுளம் குமுளி சாலையில் உள்ள புளிய மரங்களின் மேற்பலன்கள் மட்டும் அனுபவிக்கும் உரிமத்திற்கு ஒப்படைக்கும் நாள் முதல் மூன்றாண்டு காலத்திற்கு 22.02.2018 அன்று நடைபெற்ற பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் முன் வைப்புத் தொகை செலுத்தி ஏலம் கோர ஒருவரும் முன் வரவில்லை.

மேற்கண்ட இனத்திற்கு கீழ்காணும் விவரப்படி முன் வைப்புத் தொகை செலுத்தி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மட்டும் வரப்பெற்றுள்ளன. மேற்படி ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | ஒப்பந்தப்புள்ளிதாரர் பெயர் மற்றும் முகவரி | ஒப்பந்தப்புள்ளி ஆண்டுக் கேள்வி ரூபாய் |
|---|---|---|
| 1. | S.M.சுகுமாறன், த/பெ.முனியாண்டி, அங்கு விலாஸ் ரைஸ்மில் தெரு, சின்னமனூர் | 20,809/– |
| 2. | A.கண்ணன், த/பெ.அய்யாத்தேவர் மெயின் ரோடு, காசுக்கடை சந்து, சின்னமனூர் | 20,500/– |

| | |
|---|---|
| அலுவலகக் குறிப்பு:– | **மேற்படி ஏல இனத்திற்கு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மட்டும் வரப்பெற்றுள்ளது. இதில் வரிசை எண்.1 இன்படி திரு.எஸ்.எம்.சுகுமாறன், த/பெ.முனியாண்டி என்பவர் கோரியுள்ள உயர்ந்த பட்ச தொகை ரூ.20809/– கடந்த மூன்றாண்டு சராசரியைக் காட்டிலும் ரூ.2419/– (20809–18390=2419) கூடுதலாகவும் கடந்த ஆண்டு உரிமத் தொகையைக் காட்டிலும் ரூ.1515/– (20809–19294=1515) கூடுதலாகவும் உள்ளதால் மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.5431/2017/அ2).** |

**தீர்மான எண், நாள்**

**தீர்மானம்**

*******

**பொருள் எண்.9**

இந்நகராட்சிக்குச் சொந்தமான **2018–2021**ஆம் ஆண்டு குத்தகை இனமாக சீப்பாலக்கோட்டை சாலையில் உள்ள கட்டணக் கழிப்பறையில் கட்டணம் வசூலிக்கும் உரிமத்திற்கு ஒப்படைக்கும் நாள் முதல் மூன்றாண்டு காலத்திற்கு **22.02.2018** அன்று நடைபெற்ற பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் முன் வைப்புத் தொகை செலுத்தி ஏலம் கோர ஒருவரும் முன் வரவில்லை.

மேற்கண்ட இனத்திற்கு கீழ்க்காணும் விவரப்படி முன் வைப்புத் தொகை செலுத்தி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மட்டும் வரப்பெற்றுள்ளன. மேற்படி ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| **வ.எண்.** | **ஒப்பந்தப்புள்ளிதாரர் பெயர் மற்றும் முகவரி** | **ஒப்பந்தப்புள்ளி ஆண்டுக் கேள்வி ரூபாய்** |
|---|---|---|
| 1. | மு.குப்பமுத்து, த/பெ.முத்து இருளாண்டி வ.எண்.26, வெள்ளையன் தெரு, கே.கே.குளம், சின்னமனூர் | 53,500/– |
| 2. | S.M.சுகுமாறன், த/பெ.முனியாண்டி, அங்கு விலாஸ் ரைஸ்மில் தெரு, சின்னமனூர் | 48,999/– |

| | |
|---|---|
| அலுவலகக் குறிப்பு:– | **மேற்படி ஏல இனத்திற்கு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மட்டும் வரப்பெற்றுள்ளது. இதில் வரிசை எண்.1 இன்படி திரு.மு.குப்பமுத்து த/பெ.முத்து இருளாண்டி என்பவர் கோரியுள்ள உயர்ந்த பட்ச தொகை 53500/– கடந்த மூன்றாண்டு சராசரியைக் காட்டிலும் ரூ.5372/– (53500–48128=5372) கூடுதலாகவும் கடந்த ஆண்டு உரிமத் தொகையைக் காட்டிலும் ரூ.3005/– (53500–50495=3005) கூடுதலாகவும் உள்ளதால் மன்றம் அனுமதிக்கலாம் (ந.க.எண்.5431/2017/அ2).** |

**தீர்மான எண், நாள்**

**தீர்மானம்**

*****

**பொருள் எண்.10**

சின்னமனூர் நகராட்சியின் பொறியியல் பிரிவிற்கு Autocad வரைபடம் தயார் செய்ய தேவையான 1 எண்ணம் மடிக்கணினி விநியோகம் செய்யும் பணிக்கு 09.02.2018ம் தேதியன்று வரப்பெற்ற கீழ்க்காணும் விவரப்படியான ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | பெயர் | தொகை ரூ.பை |
|---|---|---|
| 1. | திரு.கே.வனராஜ், ஒப்பந்ததாரர், உப்பு கிணறு தெரு, சின்னமனூர் | 48500.00 |
| 2. | பி.சி.கேர், தேரடி இரண்டாவது தெரு, சின்னமனூர். | 49500.00 |

அலுவலகக் குறிப்பு:– **1. வரிசை எண்.1ல் காணும் நிறுவனத்தின் குறைவான விலைப்புள்ளியினை ஏற்கலாம்.**
**2. மேற்கண்ட செலவினத்தை பொது நிதியில் மேற்கொள்ள மன்றம் ஒப்புதல் வழங்கலாம். (ந.க.எண்.1568/2013/இ2)**

**தீர்மான எண், நாள்**
**தீர்மானம்**

*******

**பொருள் எண்.11**

சின்னமனூர் நகராட்சியில் 2011ம் ஆண்டின் மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி 42297 மக்கள் தொகையில் 11252 குடியிருப்புகள் உள்ளடங்கியுள்ளது. மேற்படி பகுதிகளில் இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு மூலம் டெங்கு நோய் தடுப்பு பணிக்கு 50 வீடுகளுக்கு ஒரு பணியாளர் வீதம் 37 தற்காலிகமாக DBC பணியாளர்களை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் தினக்கூலி அடிப்படையில் 01.04.2018 முதல் 31.03.2019 வரை ஓராண்டு காலத்திற்கு தனியார் அல்லது சுய உதவிக் குழுவின் மூலம் பயன்படுத்திக் கொள்வதற்கும், அதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.3500000/–க்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு:– **1. மன்றம் அனுமதிக்கலாம்.**
**2. இச்செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம். (ந.க.எண்.0680/2018/எச்1)**

**தீர்மான எண், நாள்**
**தீர்மானம்**

*******

**பொருள் எண்.12**

இந்நகராட்சிக்குச் சொந்தமான பழைய நகராட்சி அலுவலக கட்டிடத்தில் கட்டப்பட்ட மெயின் ரோட்டில் அமைந்துள்ள IDSMT கடை எண்.2 திரு.ஜி.மாணிக்கம் என்பவர் பெயரில் உள்ளது. திரு.ஜி.மாணிக்கம் என்பவர் உடல்நிலை சரியில்லாத காரணத்தினால் தொடர்ந்து கடையினை நடத்த முடியாத காரணத்தினால் அவரது பங்குத்தாரர் திரு.ரா.ஆறுமுகம் பெயருக்கு பெயர் மாற்றம் செய்வதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:–** **மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.5402/2017/அ2).**

**தீர்மான எண், நாள்**
**தீர்மானம்**

*******

**பொருள் எண்.13**

இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு மூலம் பராமரிக்கப்பட்டு வரும் பொது மற்றும் சமுதாயக் கழிப்பறைகளை அடையாளம் காணும் விதமாக ஒவ்வொரு கழிப்பறைக்கும் அடையாளப் பலகை வைப்பது தொடர்பாக விலைப்புள்ளி கோரியதில் 23.02.2018ம் நாளன்று கீழ்க்காணும் விவரப்படி மூன்று விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. அவை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | விலைப்புள்ளி கோரியவரின் விவரம் | பெயர் பலகை ஒன்று வைப்பதற்கு தொகை ரூ.பை |
|---|---|---|
| 1. | B.மணிகண்டன், Head Trust<br>அன்னை இந்திரா நகர்,<br>எம்.ஜீ.ஆர்.நகர், தேனி | ரூ.600/– |
| 2. | மா.சிவகண்ணன்,<br>56A, தெற்கு பஜார், பாளையம் கோட்டை,<br>திருநெல்வேலி | ரூ.720/– |
| 3. | ம.முருகன், எண்.1, கொடி மங்களம்<br>கொடிமங்கலம் (தபால்), மதுரை | ரூ.840/– |

**அலுவலகக் குறிப்பு:–** **மேற்காணும் மூன்று விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி கொடுத்துள்ள வரிசை எண்.1ல் காணும் மணிகண்டன், தேனி என்பவரின் விலைப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம். (ந.க.எண்.0131/2018/எச்1)**

**தீர்மான எண், நாள்**
**தீர்மானம்**

*******

**பொருள் எண்.14**

சின்னமனூர் நகராட்சியில் 1991–1992 முதல் 2015–2016ம் ஆண்டு முடிய உள்ள காலத்தில் நகராட்சியில் பணிபுரிந்த பல்வேறு நகராட்சிகளுக்கு மாறுதலில் சென்ற, ஓய்வு பெற்ற, பணியிடை மரணமடைந்த மற்றும் தற்பொழுது பணிபுரிந்து கொண்டிருக்கும் துப்புரவுப் பணியாளர் உள்ளிட்ட அனைத்து பணியாளர்களுக்கு அன்னார்களின் மாதாந்திர ஊதியத்தில் பிடித்தம் செய்து கருவூலத்தில் இருசால் செய்த சேமநல நிதி சந்தாத் தொகைக்கு (5வது ஊதியக்குழு நிலுவை மற்றும் 6வது ஊதியக்குழு நிலுவைத் தொகை சேமநல நிதியில் சேர்க்கப்பட்ட தொகைகளுக்கு உள்பட) வட்டித் தொகை கணக்கிட்டு வழங்க நகராட்சியில் வேலைப்பளுவின் காரணமாக இயலாத நிலை நீடிப்பதால் 1991–1992ம் ஆண்டு முதல் 2015–2016ம் ஆண்டு முடிய உள்ள காலத்திற்கு சேமநல நிதி சந்தாதாரர்களுக்கு ஆண்டு வாரியாக (5வது மற்றும் 6வது ஊதியக்குழு நிலுவைத் தொகை உள்பட) வட்டி விகிதம் கணக்கீடு செய்வது, மற்றும் அது தொடர்பான அட்டவணைகள் தயார் செய்தல் உள்ளிட்ட அனைத்துப் பணிகளையும் கணினி மூலம் தனியார் நிறுவனம் மூலம் ஒப்பந்தப்புள்ளிகள் கோரி செய்து முடிக்கவும், அதற்கான உத்தேச செலவினம் ரூ.90000/–ஐ நகராட்சியின் வருவாய் மற்றும் மூலதன நிதியில் வழங்கவும், பணியாளர்களிடம் பிடித்தம் செய்யப்பட்ட சேமநலநிதி சந்தாத் தொகை நகராட்சியின் வைப்புத் தொகையில் போதிய நிதியின்மையால் வைக்கப்பட்டமைக்கு, உரிய கணக்கீடு செய்து தனி நபர்களுக்கு வரும் வட்டித் தொகை மொத்தத்திற்கும், உள்ளாட்சி நிதித்தணிக்கைத் துறை, இயக்குநர் அவர்களிடமிருந்து அனுமதிக்கப்படும் வட்டித் தொகைக்கு உள்ள வித்தியாச தொகையினையும் கணக்கீடு செய்து நகராட்சியின் வருவாய் மற்றும் மூலதன நிதியிலிருந்து வழங்கவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு:– **நகராட்சிப் பணியாளர்களின் நலன் கருதி தொகையின் வருவாய் மற்றும் மூலதன நிதியில் வழங்க அனுமதிக்கலாம்.**

**தீர்மான எண், நாள்**
**தீர்மானம்**

*******

**பொருள் எண்.15**

சின்னமனூர் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் அன்றாட ஏற்படும் அடைப்புகளை சீர் செய்யவும் அவ்வப்போது பகிர்மான மற்றும் பிரதான குழாய்களில் ஏற்படும் பழுதுகளை நீக்கவும் தேவையான பொருட்கள் நகராட்சியில் இருப்பில் இல்லை எனவே கீழ்க்கண்ட விவரப்படியான பொருட்கள் வாங்க ஆகும் உத்தேச மதிப்பீடு ரூ.400000/—க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1. | 140MM PVC Pipe – 6Kg | 150meter |
| 2. | 110MM PVC Pipe – 6 Kg | 150Meter |
| 3. | 90MM PVC Pipe – 6 Kg | 180 meter |
| 4. | 90MM PVC Coupler (Long Coupler) | 75 Nos |
| 5. | 110MM PVC Coupler | 60 Nos |
| 6. | 140MM PVC Coupler 4 Kg | 30 Nos |
| 7. | 140x110 MM PVC Reducer | 25 Nos |
| 8. | 110x90 mm PVC Reducer | 25 Nos |
| 9. | ½" Oil Rope | 100 Kg |
| 10. | ¼" Oil Rope | 50 Kg |
| 11. | Cutting Machine | 1 No |
| 12. | Rubber Sheet | 100 Kg |
| 13. | 3x5/8" Bolt Nut Vacher | 200 Nos |
| 14. | Solvent Cement | 50 Litre |

அலுவலகக் குறிப்பு:— **1. மன்றம் அனுமதிக்கலாம்.**
**2. இச்செலவினத்தை குடிநீர் மற்றும் வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ள தீர்மானிக்கலாம். (ந.க.எண்.0680/2018/எச்1)**

**தீர்மான எண், நாள்**
**தீர்மானம்**

*******

**பொருள் எண்.16**

சின்னமனூர் நகராட்சிக்குட்பட்ட விஸ்வன்குளம் மற்றும் அய்யனார்புரத்தில் உள்ள OHT களுக்கு செல்லும் குடிநீர் பகிர்மான குழாயில் அடிக்கடி உடைப்பு ஏற்பட்டு (நீர் உந்தும் தன்மை அதிகமாக உள்ள காரணத்தால்) குடிநீர் விநியோகம் பாதிப்பதுடன், மேற்படி குழாய் மாநில நெடுஞ்சாலை வழியாக செல்வதால் அதனை உடனே சரி செய்ய முடியாமல் மிகவும் சிரமத்திற்கு ஆளாக வேண்டிய சூழல் நிலவுவதால் மேற்கண்ட பகுதிகளுக்கு செல்லும் பகிர்மான குழாய்களை மாற்றியமைக்கவும் மேலும் ஜக்கம்மாள் கோவில் தெருவில் உள்ள பைப்புகளில் நீரின் அளவு குறைவாக செல்வதால் அப்பகுதி வாழ் மக்களுக்கு சரியான முறையில் குடிநீர் விநியோகிக்க முடியாத சூழலில் அப்பகுதி வாழ் மக்கள் தொடர்ந்து நகராட்சியில் தொடர்ந்து புகார் அளித்த வண்ணம் உள்ளதால் மேற்கண்ட இரண்டு பணிகளை மேற்கொள்ள ஆகும் உத்தேச மதிப்பீடு ரூ.6.00 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி வேண்டி மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு:– 1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. இச்செலவினத்தை நகராட்சி குடிநீர் மற்றும் வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம். (ந.க.எண்.0680/2018/எச்1)

**தீர்மான எண், நாள்**
**தீர்மானம்**

*******

**பொருள் எண்.17**

சின்னமனூர் நகராட்சியில் பொது மக்களின் நலன் கருதி அமல்படுத்தப்பட்ட வரும் பாதாள சாக்கடைத் திட்டம் திருத்திய மதிப்பீட்டின்படி ரூ. 14.52 கோடி செலவினத்தில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் கட்டி முடிக்கப்பட்டு நல்லமுறையில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மேற்படி திட்டத்தினை நடைமுறைப்படுத்த தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் மூலம் தேனி மாவட்ட சுற்றுச் சூழல் பொறியாளர் அவர்களின் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.

அதனைத் தொடர்ந்து 2017–2018ம் நிதியாண்டிற்கு மேற்கண்ட அனுமதியினை புதுப்பிக்கும் பொருட்டு தண்ணீர் மற்றும் காற்று சட்டம் 1974இன்படி கேட்பு ரூ.30000/–ஐ தேனி மாவட்ட மாசுக்கட்டுப்பாட்டு வாரியத்திற்கு கேட்புக் காசோலைலாக எடுத்து அனுப்பிய பின்னரே ஆன்லைன் மூலம் புதுப்பிக்க இயலும் என்பதால் மேற்கண்ட தொகையினை “District Enviromental Engineer, Tamilnadu Pollution Control Board, என்ற முகவரிக்கு செலுத்த மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு:–
1. **2017–2018ம் நிதியாண்டிற்கு பாதாள சாக்கடைத் திட்டத்திற்கு புதுப்பித்தல் அனுமதி கட்டணம் செலுத்த அனுமதிக்கலாம்.**
2. **அவசரப்பணி நிமித்தம் மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி தொகை செலுத்தியுள்ளதை மன்ற அங்கீகரிக்கலாம்.**

**தீர்மான எண், நாள்**
**தீர்மானம்**

*******

**பொருள் எண்.18**

“பாரத ரத்னா டாக்டர் எம்.ஜீ.ஆர்.” அவர்களின் நூற்றாண்டு விழா சிறப்பு மலரில் அரசு விளம்பரங்களை வெளியிட மாவட்ட ஆட்சித் தலைவர் தேனி அவர்களின் அலுவலக ந.க.எண்.9/செ.ம.தொ.அ/2018/நாள்.17.01.2018ம் தேதியன்று வரப்பெற்ற கடிதத்தில் அறிவுறுத்தப்பட்டதற்கிணங்க சின்னமனூர் நகராட்சி பகுதிகளில் நடைபெற்ற திட்டப்பணிகள் குறித்து மாலை மலர் மாலை நாளிதழில் வெளியிட்ட வகையில் ஆன செலவினம் ரூ.13860/–க்கு மேற்கண்ட நிறுவனம் பட்டியல் வழங்கியதை தொடர்ந்து அதற்கான செலவினத் தொகை வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு:– **1. மன்றம் அனுமதிக்கலாம்.**
**2. மேற்கண்ட விளம்பரத்திற்கான செலவினத்தை நகராட்சி வருவாய் மற்றும் மூலதன நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் தீர்மானிக்கலாம்.(ந.க.எண்.5251/2017/இ1).**

**தீர்மான எண், நாள்**
**தீர்மானம்**

*******

**பொருள் எண்.19**

இந்நகராட்சிக்குட்பட்ட பழையபாளையம் ரோடு, காந்தி நகர் காலனி, முத்தாலம்மன் கோவில் தெரு, மின்நகர் மற்றும் சாமிகுளம் பகுதிகளில் சேதமடைந்த சாலைகளை சரி செய்யும் பணி ரூ.5.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள 16.02.2018ம் தேதியன்று கீழ்க்கண்ட விவரப்படியான ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் அனுமதி வேண்டி வைக்கப்படுகிறது.

1. திரு.ஆர்.பரமானந்தன், ஒப்பந்ததாரர் – 0.50 சதவீதம் மதிப்பீட்டைவிட அதிகம்.
2. திரு.கே.வனராஜ், ஒப்பந்ததாரர் – 0.30 சதவீதிம் மதிப்பீட்டைவிட குறைவு

**அலுவலகக் குறிப்பு:–** **வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர் திரு.கே.வனராஜ் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம். (0.30 சதவீதம் மதிப்பீட்டைவிட குறைவு).**

**தீர்மான எண், நாள்**

**தீர்மானம்**

*******

**பொருள் எண்.20**

சின்னமனூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.27, பள்ளிக்கோட்டைபட்டியில் புதிய கழிப்பிடம் கட்டும் பணி ரூ.10.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள 16.02.2018ம் தேதியன்று வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் கீழ்க்கண்ட விவரப்படி மன்ற அனுமதி வேண்டி வைக்கப்படுகிறது.

1. திரு.எஸ்.சந்திரன், ஒப்பந்ததாரர் – 0.10 சதவீதம் மதிப்பீட்டைவிட குறைவு
2. திரு.கே.முனிசாமி, ஒப்பந்ததாரர் – 0.30 சதவீதம் மதிப்பீட்டைவிட அதிகம்.

**அலுவலகக் குறிப்பு:–** **வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்தக்காரர் திரு.எஸ்.சந்திரன் அவர்களின் (0.30 சதவீதம் மதிப்பீட்டைவிட குறைவு) ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம். (ந.க.எண்.0116/2018/இ1).**

**தீர்மான எண், நாள்**

**தீர்மானம்**

*******

**பொருள் எண்.21**

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.1 முதல் 27 முடிய உள்ள வார்டுகளில், வரிவிதிப்புகள் சிலவற்றிலுள்ள கட்டிடம் மட்டும் இடிக்கப்பட்டு மீண்டும் கட்டுமானம் செய்து புதிய வரிவிதிப்பு வழங்கும் போது பழைய வரி விதிப்பு எண்களை நீக்கம் செய்யப்பட்டு மாதாந்திர பட்டியலில் பதிவு செய்யப்பட்டுள்ளது. மேலும், காலியிட வரி விதிப்புகள் புதிய கட்டிடம் கட்டி முடிக்கப்பட்டு புதிய சொத்துவரி விதிப்பு செய்யும் போது காலியிட வரிவிதிப்பினை நீக்கம் செய்யப்பட்டு மாதாந்திர பட்டியலில் பதிவு செய்யப்பட்டுள்ளது. ஆனால், வார்டு எண்.1 முதல் 27 முடிய உள்ள வரிவிதிப்புகள் நீக்கம் செய்யப்படாமல் கணினியில் கேட்பு வருகிறது. அதனை நகராட்சி நிர்வாக ஆணையர் அலுவலகத்திற்கு மின்னஞ்சல் மூலம் அனுப்பி வைக்கப்பட்டதற்கு அதனை கணினியில் Write Off செய்யுமாறு தொலைபேசி செய்தியின் மூலமாக வரப்பெற்ற அறிக்கையின் வாயிலாக கணினியில் Write Off செய்ய மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:–** **பதிவு செய்யலாம். (ந.க.எண்.5286/2015/அ1).**

**தீர்மான எண், நாள்**

**தீர்மானம்**

*******

**பொருள் எண்.22**

சின்னமனூர் நகராட்சிக்குச் சொந்தமான சார்பதிவாளர் தெருவில் உள்ள வணிக வளாக கடை எண்.10ஐ திரு.அ.பன்னீர் செல்வம் த/பெ.அருணாச்சலம் என்பவர் மாத வாடகை அடிப்படையில் எடுத்து நடத்தி வந்த நிலையில், திரு.அ.பன்னீர் செல்வம் **16.06.2011**ல் மரணமடைந்ததால் அன்னாரின் வாரிசுதாரர் திரு.ப.முத்துராஜா த/பெ.அ.பன்னீர்செல்வம் என்பவர் மேற்படி கடை எண்.10ஐ அதே குத்தகை அடிப்படையில் வாடகைக்கு நடத்துவதற்கு **17.10.2017**ம் அன்று மனுச் செய்துள்ளார்.

மேலும் மேற்படி கடைக்கு 12 மாத வாடகை மற்றும் GST தொகையினை முன்வைப்புத் தொகையாகவும் பெயர் மாற்றக் கட்டணம் ரூ.**2500/–** செலுத்தியுள்ளார் (**100** சதுர அடிக்குள்) மேலும் அரசாணை எண்.**92,** நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.**03.07.2007** பத்தி எண்.4(VI) ன்படி அனுமதியற்ற அனுபோகதாரர்களில் நேர்வில், ஒரு முறை மட்டும் குத்தகை உரிமையை பெயர் மாற்றம் செய்ய அனுமதி வழங்கியுள்ளதால், திரு.ப.முத்துராஜா என்பவருக்கு குத்தகை உரிமையினை பெயர் மாற்றம் செய்ய மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு:– **அரசாணை எண். 92, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.03.07.2007இன்படி அனுமதிக்கலாம். (ந.க.எண்.4671/2018/அ2).**

**தீர்மான எண், நாள்**

**தீர்மானம்**

*******